## இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு - 2013

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, ஒதுக்கங்களிலுள்ள மாற்றங்களின் கூற்று மற்றும் காசோட்டக் கூற்று மற்றும் குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முவடைந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதியதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1987 இன் 36 ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு அதிகாரச் சட்டத்தின் 37(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிகச் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளிற்கு இணங்க எனது பணியின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை

உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடுசெய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 சட்டங்கள், விதிகள். பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள். மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத பின்வரும் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) மனித வளங்கள் முகாமைத்துவம் தொடர்பான சகல விடயங்களினுடனான விதிகள் மற்றும் பிரமாணங்களை வழங்கும் மனிதவள முகாமைத்துவத்தில் ஒரு அத்தியாயத்துடன் நடைமுறைக் கைநூல் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருக்க

வேண்டியதுடன் அதன் பின்னர் திறைசேரிச் செயலாளரின் ஒத்திசைவு பெறப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், இது தொடர்பில் ஆணைக்குழு 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க நல்லாட்சிக்கான பொது முயற்சிகள் வழிகாட்டல்களின் 9 ஆம் அத்தியாயத்தின் 9.14 ஆம் பிரிவுடன் இணங்கத் தவறியிருந்தது.

(ஆ) ஊழியர்களின் சேர்ப்பனவு அவர்களுடைய சம்பளங்கள் மற்றும் வேதனங்களை நிர்ணயிப்பதுடன் தொடர்பான அரசாங்க நிறுவனங்கள் தொர்புபட்டிருந்த அரசாங்க சுற்றுநிருபங்கள், ஏனைய விதிகள் மற்றும் பிரமாணங்களில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டல்களை பின்பற்றியிருக்கவில்லை அரசாங்க பிரமாணங்களிற்கு உட்படுத்தாமல் நபர்களை சேர்ப்பதற்கும் அவர்களுடைய சம்பங்கள் மற்றும் வேதனங்களை நிர்ணயிப்பதற்கும் ஆணைக்குழு சுதந்திரமாக உள்ளதென நிதி அமைச்சு செயலாளரால் வழங்கப்பட்ட 1992 மார்ச் 31 ஆந் திகதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், ஆணைக்குழு அரசாங்க விதிகள் மற்றும் பிரமாணங்களிலிருந்து விலகுவதற்காக வேண்டப்பட்ட அமைச்சரவையிலிருந்து அங்கீகாரத்தை பெற்றிருக்கவில்லை. மேலும், இருக்கின்ற அரசாங்க விதிகள் மற்றும் பிரமாணங்களிலிருந்து விலக்கழிக்கப்படுவதற்கு 1989 இன் 36 ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்தனை ஆணைக்குழு அதிகாரச் சட்டத்தில் ஆணைக்குழுவிற்கு விலக்களிப்பதற்கான அத்தகைய எவ்வித ஏற்பாடும் இருக்கவில்லை.

### 2.2.2 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மிகையூதியக் கொடுப்பனவிற்காக திறைசேரி அங்கீகாரத்தைப் பெறுமாறு பொது முயற்சிகள் குழு (சீஓபீஈ) அறிவுறுத்தியிருந்த போதிலும் அத்தகைய அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாது ஆணைக்குழுவானது மீளாய்வாண்டிற்காக ரூபா 10,638,789 தொகையான வருடாந்த மிகையூதியக் கொடுப்பனவுவை செலுத்தியிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஆணைக்குழுவின் தொழிற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 206,497,805 ஆன நேரொத்த பற்றாக்குறையுடன் ஒப்பிடும் போது தொழிற்பாட்டுச் செலவுகளிற்கான செஸ் நிதியத்திலிருந்தான மாற்றங்களைக் கணக்கிற்கு எடுக்க முன்னரான ரூபா 305,703,501 ஆன பற்றாக்குறையில் விளைவித்திருந்தது. தொழிற்பாட்டுச் செலவுகளிற்கான ரூபா 318,547,041 ஆன செஸ் நிதியத்திலிருந்தான

மாற்றங்களைக் கணக்கிற்கு எடுத்த பின்னர் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகள் ரூபா 12,843,540 ஆன மிகையாக இருந்தது. முன்னைய ஆண்டிற்கான தொழிற்பாட்டுச் செலவுகளிற்கான ரூபா 218,522,637 ஆன செஸ் நிதியத்திலிருந்தான மாற்றங்களைக் கணக்கிற்கு எடுத்த பின்னரான அந்த ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 12,024,832 மிகையாக இருந்தது, ஆகையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 818,708 ஆன அதிகரிப்பை அது காட்டுகின்றது.

மேற்குறிப்பிட்ட அதிகரிப்புக்கான பிரதான காரணங்களை பின்வருமாறு குறிப்பிட முடியும்,

மீளாய்வாண்டிற்கான ஆணைக்குழுவின் வருமானம் வருமானத்தில் 36.5 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்த முன்னைய ஆண்டிற்கான தொழிற்பாட்டு செலவினங்களிற்காக ரூபா 219 மில்லியன் தொகையான செஸ் நிதியத்திலிருந்தான மாற்றங்கள் உள்ளடங்கலாக ரூபா 255 மில்லியன் வருமானத்துடன் ஒப்பிடப்படும் போது தொழிற்பாட்டு செலவினங்களிற்கான ரூபா 319 மில்லியன் செஸ் வரி நிதியத்திலிருந்தான மாற்றங்கள் உள்ளடங்கலான ரூபா 348 மில்லியனாக இருந்தது. அதேநேரம் மீளாய்வாண்டின் போது மூலதன சந்தை அபிவிருத்தி நடவடிக்கைகளிற்காக ஏற்பட்ட செலவினம் முன்னைய ஆண்டிலுள்ள ரூபா 24 மில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா 66 மில்லியனாக இருந்தது. ஆகையால் இது செலவினத்தில் 175 சதவீத அதிகரிப்பை காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு மீளாய்வாண்டின் போதான ஆணைக்குழுவின் வருமானம் மற்றும் செலவின மாற்றங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | **2013** | **2012** | **மாற்றம்** | |
|---|---|---|---|---|
| | ரூபா (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) | % |
| செஸ் வரி நிதியத்திலிருந்து மாற்றம் | 319 | 219 | 100 | 46 |
| தரகர் அனுமதிப்பத்திர கட்டணங்கள், நிருவாக வரி மற்றும் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் | 14 | 21 | (7) | (33) |
| நானாவித வருமானம் மற்றும் அனுமதித்த மானியம் | 15 | 16 | 01 | 06 |
| ஆளணி மற்றும் நிருவாகக் கிரயம் | 269 | 219 | 50 | 23 |

| | | | | |
|---|---|---|---|---|
| மூலதன சந்தை அபிவிருத்தி செலவுகள் | 66 | 24 | 42 | 175 |
| ஆண்டிற்கான மிகைகள் | 13 | 12 | 01 | 08 |

முன்னைய ஆண்டிற்கான 10 சதவீதத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது மூலதன சந்தை அபிவிருத்தி நடவடிக்கைகளிற்காக மொத்த செலவினத்தில் 20 சதவீதம் மாத்திரம் ஏற்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 செயற்பாட்டு திட்டத்திலுள்ள இலக்குகளை அடைதல்

மீளாய்வாண்டின் போது திருத்தப்பட்டிருந்த கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயற்பாட்டு திட்டத்தில் குறிப்பிடப்பட்ட இலக்குகளை அடைதல் தொடர்பில் கணக்காய்வில் குறிப்பிடத்தக்க தாமதங்கள் அவதானிக்கப்பட்டது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| பிரிவு | குறிக்கோள்கள் மற்றும் தந்திரோபாயங்கள் | தொடங்கிய திகதி | பூர்த்தியாக்க வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட திகதி | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தாமதமான மாதங்கள் | திருத்திய பூர்த்தியாக்கல் திகதி |
|---|---|---|---|---|---|
| மூலதன சந்தை அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி | விசாலமான உற்பத்தி அளவிற்கு புதிய உற்பத்தி அளவுகளை அபிவிருத்தி செய்தல் (வழிச்சரக்குகள், பொருட் பரிமாற்றங்கள்) | | | | |
| | • சரக்கு மற்றும் வழிச்சரக்கு பொருட் பரிமாற்றங்களின் வசதி ஸ்தாபிப்பு | 1Q 2013 | 2Q 2013 | 6 | 4 Q 2013 |
| | ❖ ரீஈசீ, சீஏபிசீ மற்றும் எஸ்ஈசீ நியமித்த எம்ஓஎவ் ஆலோசனைக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி அல்லது உலக வங்கியிடமிருந்தான தரகு ஆலோசனை | 1Q 2013 | 2Q 2013 | 6 | 4 Q 2013 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ❖ ஆலோசனையாளருக்கான ரீஓஆர் | 1Q 2013 | 2Q 2013 | 6 | 4 Q 2013 |
| | ❖ ஆலோசனையாளர் நியமனம் | 1Q 2013 | 2Q 2013 | 6 | 4 Q 2013 |
| | ❖ ஒப்பந்த வரைவு | 1Q 2013 | 2Q 2013 | 6 | 4 Q 2013 |
| | ❖ ஒப்பந்தம் வழங்கல் | 1Q 2013 | 2Q 2013 | 6 | 4 Q 2013 |
| நிதி மற்றும் நிர்வாகம் | • தகவல் தொழில்நுட்பம் | | | | |
| | ❖ அனர்த்த அறவீட்டு பகுதியின் அமுலாக்கல் | 1Q 2013 | 2Q 2013 | 6 | 4 Q 2013 |
| புலனாய்வு | • புலனாய்வு உட்கட்டமைப்பு மற்றும் முறைகளின் முன்னேற்றம் | 1Q 2009 (CP 2009) | 3Q 2009 | 30 | 4 Q 2013 |
| | • தகவல் தொழில்நுட்ப உள்ளீட்டை பயன்படுத்தி புலனாய்வில் தரவு அடிப்படை முன்னேற்றம் | 4Q 2010 (CP 2009) | 2Q 2011 | 51 | 1 Q 2014 |
| மேற்பார்வை | • நம்பிக்கை பொறுப்பு பிரிவு முகாமை செய்கின்ற ஈ-பில்லிங் அமுலாக்கல் | 1Q 2009 (CP 2009) | 1Q 2009 | 57 | 4 Q 2013 |
| | • சந்தை இடைத் தரகர்கள், கடன் வீதப்படுத்தர் முகவர்கள், முதலீட்டு முகாமையாளர்கள், எல்லை வழங்குநர் மற்றும் குறைத்து எழுதுவோர் என்போருக்கு ஈ- பில்லிங் அமுலாக்கல் | 2Q 2009 (CP 2009) | 4Q 2009 | 48 | அகற்றப்பட்டது<br>4 Q 2014<br>2 Q 2014<br>அகற்றப்பட்டது |
| சட்ட மற்றும் அமுலாக்கல் | • புதிய கையேற்பாளர் மற்றும் ஈட்டாளர் குறிகளின் இறுதியாக்கல் | 1Q 2010 (CP 2010) | 1Q 2010 | 45 | 4 Q 2013 |

**4.2 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்**

பின்வரும் அவவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு அதிகாரச் சட்டத்தின் படி, விலை மோசடிகள், உள்ளக / தொடர்புபட்ட தரப்பினர் வியாபாரங்கள், தரகர்களின் ஒழுங்கற்ற நடத்தைகள் என்றவாறான மீறல்களைக் குறைப்பதன் நோக்கில் கண்டுபிடித்த குற்றங்களிற்கெதிராக நேரகாலத்துடன் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டில் மேற்பார்வை பிரிவு மற்றும் கொழும்பு பங்கு பரிவர்த்தனையூடாக ஆணைக்குழுவினால் இனங்காணப்பட்ட 31 வழக்குகளில் 02 வழக்குகள் மாத்திரம் கடின மேற்பார்வை புலனாய்வுக் குழுவினால் மேலதிக விசாரணைகளிற்காக உத்தரவாதப்படுத்தப்பட்டன.

பதினைந்து புலனாய்வுகள் புலனாய்வுப் பிரிவால் நடாத்தப்பட்டிருந்ததுடன் 07 புலனாய்வுகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. மிகுதி புலனாய்வுகள் செயற்பாட்டில் உள்ளன. மேற்குறிப்பிட்ட 15 புலனாய்வுகளில், 09 புலனாய்வுகள் 2013 இற்கு முன்னர் தொடங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், புலனாய்வுகளில் குறிப்பாக குறிப்பிடத்தக்க தாமதங்கள் அவதானிக்கப்பட்டன. ஆணைக்குழுவின் தலைவர் பங்குச் சந்தை தொடர்புபட்ட புலனாய்வுகள் இறுதியாக்குவதற்கு முன்னர் நீண்ட நடைமுறையொன்று பின்பற்ற வேண்டியதுடன் இது தாமதத்திற்கான காரணமாக இருந்தது என எனக்கு தெரிவித்திருந்தார்.

(ஆ) பொது மக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் மீது ஏற்பட்ட ரூபா 38.7 மில்லியன் மொத்த செலவினத்தில், ரூபா 9.1 மில்லியன் அல்லது 23 சதவீதம் ‘‘தெயட்ட கிருல’’ மற்றும் ‘‘தருண்யட்ட கெட்டக்’’ நிகழ்ச்சித்திட்டங்களிற்காக ஏற்பட்டிருந்தது. ஆணைக்குழுவின் தலைவர் ஆணைக்குழு மூலதன சந்தை மீது பொது மக்கள் அறிவை விருத்திசெய்வதற்கு மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித்திட்டங்களில் செலவழிக்கப்பட்டிருந்தது என தெரிவித்திருந்தார்.

**4.3 மனிதவளங்கள் (எச்ஆர்) முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆணைக்குழுவின் அனுமதிக்கப்பட்ட பதவியணி 96 ஆக இருந்த போதிலும் உள்ளபடியான பதவியணி 83 ஆக இருந்ததுடன் இது மீளாய்வாண்டு

இறுதியளவில் 08 சேவை தரத்திற்குள் வகைப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2014 யூன் 30 வரையும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தவறியிருந்தது.

(ஆ) தாபன விதிக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 12.5.4 ஆம் பிரிவின் பிரகாரம், ஆணைக்குழு நிரந்தர உத்தியோகத்தர் ஒருவருக்கு பதில்கடமை நியமனமொன்றை வழங்கியிருந்ததுடன் திறசேரி செயலாளர் மற்றும் பொது நிர்வாக செயலாளர் என்போரிடமிருந்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் 2013 ஏப்ரல் முதல் 2013 திசெம்பர் வரை ரூபா 311,250 ஆன பதில்கடமை படிகள் செலுத்தப்பட்டிருந்தது. 1997 பெப்ரவரி 03 ஆந் திகதிய 06/97 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம், பதில் கடமை நியமனங்கள் ஆகக் கூடியது 03 மாதங்கள் இருக்க வேண்டியதுடன் 14 மாதங்கள் பதில்கடமை காலமாக இருந்த போதிலும் பதில்கடமை பதவிக்கான வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்கவில்லை.

**5. பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்கான மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையில் 60 சதவீதம் முதல் 96 சதவீதம் வரையான வீச்சிலான முரண்கள் உள்ளன, ஆதலால், பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் ஒரு தாக்கமான கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக் காட்டுகின்றது. அத்தகைய சில சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

(அ) ஆணைக்குழுவானது மூலதன செலவினமாக ரூபா 62.3 மில்லியன் தொகையொன்றாக பாதிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 7.4 மில்லியன் தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்ததுடன் முரண் பாதிடப்பட்ட செலவினத்தின் 88 சதவீதமாக இருந்தது.

(ஆ) சட்டச் செலவினத்திற்காக ரூபா 11 மில்லியன் தொகை பாதிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 1.35 மில்லியன் மாத்திரம் ஏற்பட்டிருந்ததுடன் முரண் 87 சதவீதமாக இருந்தது.

(இ) உறுப்புறுரிமை கட்டணங்களிற்காக ரூபா 3.5 மில்லியன் தொகை பாதிடப்பட்டிருந்த போதிலும் உள்ளபடியான செலவினம் பாதிடப்பட்ட செலவினத்தின் 72 சதவீத முரணொன்றின் 0.98 மில்லியனாக இருந்தது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்கு காலம் ஆணைக்குழுவின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பாதீடு
(ஆ) மனிதவள முகாமைத்துவம்
(இ) மேற்பார்வை மற்றும் புலனாய்வுகள்
(ஈ) உள்ளகக் கட்டுப்பாடு